தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06
ந.க.எண். 034785/எம்1/இ1/2025, நாள்:30.06.2025

பொருள்: பள்ளிக் கல்வி –மன்றச் செயல்பாடுகள்– மாணவர்களிடையே கல்வி இணை மற்றும் கல்விசார்/கல்விசாரா செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் மாதந்தோறும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்– சார்ந்து.

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/எம்1/இ1/2025, நாள். 19.02.2025.

******

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் மேம்பாட்டில் மன்றச் செயல்பாடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. பாடப்புத்தக அறிவைத் தாண்டி, மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக் கொணரவும், அவர்களின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்யவும் இந்த மன்றச் செயல்பாடுகள் ஒரு அடிப்படை கருவியாக விளங்குகின்றன.

இதனை கருத்திற்கொண்டு, 2022-23 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

"பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றால் கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் அவற்றைப் புதுப்பித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்படும்.

மேற்கண்ட அறிவிப்பின்படி, கடந்த மூன்று வருடங்களாக அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கல்விசார்/கல்விசாரா செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இதற்கென தனி பாடவேளை ஒதுக்கீடு செய்யப்பட்டு இச்செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த 2025-26 ஆம் கல்வியாண்டில், மன்றச் செயல்பாடுகளின் துவக்க நிகழ்ச்சியினை 03.07.2025 அன்று அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலை வணக்கக் கூட்டத்தின் போது நடத்திட தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இலக்கிய மன்றம், வினாடி-வினா மன்றம், சிறார் திரைப்பட மன்றம், வானவில் மன்றம், கலை மற்றும் பண்பாட்டு மன்றம் (கலைத்திருவிழா) மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் போன்று பள்ளியளவில் செயல்படும் அனைத்து மன்றச் செயல்பாடுகளுக்கும் தனித்தனியாக ஒரு பொறுப்பாசிரியரை நியமித்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு மன்றச்

செயல்பாட்டிலும் சிறந்து விளங்கும் ஒரு மாணவரை அந்தந்த மன்றச் செயல்பாட்டிற்கான தூதுவராக நியமித்து பின்வரும் செயல்பாடுகளை அன்று திட்டமிட்டு மேற்கொள்ளுதல் வேண்டும்.

## மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சி – 03.07.2025

| | |
|---|---|
| தலைமையாசிரியரின் வரவேற்புரை | 2025-26 ஆம் ஆண்டில் பள்ளியளவில் செயல்படும் அனைத்து மன்றச் செயல்பாடுகளின் துவக்கத்தினை அறிவித்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை எடுத்துரைத்தல் |
| | மன்றச் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளையின் அவசியம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அச்செயல்பாடுகள் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு (holistic development of students) எவ்வாறு வழிவகுக்கிறது என்பதை உணர்த்துதல். |
| | ஒவ்வொரு மன்றச் செயல்பாடுகளுக்கான பொறுப்பு ஆசிரியகள் மற்றும் மாணவ தூதுவர்களை அறிமுகப்படுத்துதல். |
| ஒவ்வொரு மன்ற பொறுப்பாசிரியர்களின் விளக்க உரை | ஒவ்வொரு மன்ற பொறுப்பாசிரியரும் தனித்தனியே அந்தந்த மன்றச் செயல்பாடுகளையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தல். |
| | கடந்த மூன்றாண்டுகளில் அந்தந்த மன்றச் செயல்பாடுகளில் அந்தந்த பள்ளி மாணவர்களின் சாதனைகளை கூறி மாணவர்களை ஊக்குவித்தல். |
| ஒவ்வொரு மன்ற மாணவ தூதுவர்களின் உரை | அந்தந்த மன்றச் செயல்பாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து இனிவரும் காலங்களில் அனைத்து மாணவர்களின் பங்கேற்பினை ஊக்குவித்தல். |
| அந்தந்த மன்றப் பொறுப்பாசிரியர்கள் | இந்த மாதத்திற்கான தலைப்பு, செயல்பாடுகள் மற்றும் போட்டிகளை அறிவித்தல்.<br>ஒவ்வொரு மாதமும் தலைப்பு, செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் குறித்த விவரத்தினை அனைவரின் பார்வையில் படும்படியான இடத்தில் காட்சிப்படுத்துதல். |
| மகிழ்முற்றம் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (House System Teacher Coordinator) | பள்ளி மற்றும் வகுப்பறையளவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் மகிழ்முற்ற மாணவர் குழுக்கள் வாயிலாகவே நடைபெறுவதை உறுதிசெய்தல்.<br>ஒவ்வொரு மன்ற செயல்பாடுகளிலும் மாணவர்களின் பங்கேற்பிற்கு ஏற்றவாறு மகிழ்முற்ற மாணவர் குழுக்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படுவதை தெரியப்படுத்துதல். |
| உறுதிமொழி ஏற்றல் | அனைவரும் உறுதிமொழி ஏற்றல். |

இந்த துவக்க நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து மன்றங்களும் முறையாக அமைக்கப்பட்டு

வாரந்தோறும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடவேளைகளில் மன்றச் செயல்பாடுகள் முறையாகவும், தொடர்ச்சியாகவும் நடைபெறுவதை அந்தந்த பள்ளி தலைமையாசிரியரும் மன்றப் பொறுப்பாசிரியர்களும் உறுதி செய்தல் வேண்டும். குறிப்பாக அனைவரும் இம்மன்றச் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் வேறு எந்தவித செயல்பாடுகளுக்கும் இடமளிக்காமல் மன்றச் செயல்பாடுகள் மட்டுமே நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும். மேலும், மன்றச் செயல்பாடுகள் குறித்து அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு, இச்செயல்பாடுகள் அனைத்தும் மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக நடைபெறுவதை உறுதிசெய்து, அதில் மாணவர்களின் பங்கேற்பையும், அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் கண்காணிக்கவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், இவ்வாறாக பள்ளிகளில் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படும் கல்வி கல்விசார் / கல்வி சாரா செயல்பாடுகள் அனைத்தும் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் திறனைப் பெறவும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே, இவ்வகையான அனைத்து செயல்பாடுகளிலும் ஒவ்வொரு மாணவரின் பங்கேற்பினை உறுதிசெய்யும் நோக்கில் அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் திட்டமிட்டு இந்நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசுப்பள்ளி தலைமையாசிரியர்களும் மற்றும் ஆசிரியர்களும் இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி முழு கவனம் செலுத்தி முனைப்புடன் செயல்படுத்த தேவையான வழிகாட்டுதல்களை வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உரிய மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை) மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) ஆகியோருக்கும் உரிய ஆணை வழங்கிட தெரிவிக்கப்படுகின்றது.

இணைப்பு – மாதாந்திர இலக்கிய மன்றச் செயல்பாடுகளுக்கான அட்டவணை மற்றும் வினாடி-வினா செயல்பாட்டிற்கான குறிப்புகள்

இயக்குநர்

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
அனைத்து மாவட்டங்கள் .

நகல்
1. அரசு முதன்மைச் செயலர் அவர்கள்,
பள்ளிக் கல்வித் துறை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்துதனுப்படுகிறது.

2. மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ,
சமக்ர சிக்சா , சென்னை-06.

3. இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை-06.

4. உறுப்பினர் செயலர்,
மாதிரிப் பள்ளிகள்,
சென்னை-06.

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# JUNE 2025

## ACTIVITY -POSTER MAKING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | International Yoga Day | Importance of Yoga<br>யோகாவினால் பயனடைவோம்! |
| முல்லை | World Music Day | Musical forms of India<br>இந்தியாவின் வெவ்வேறு இசை வடிவங்கள் |
| மருதம் | World Rainforest Day | Effects of deforestation<br>காடுகள் அழிப்பினால் ஏற்படும் விளைவுகள் |
| நெய்தல் | World Olympic Day | Importance of movement and exercise for our health<br>நமது ஆரோக்கியத்திற்கான இயக்கம் மற்றும் உடற்பயிற்சியின் இன்றியமையாமை |
| பாலை | World Drug Day | Drug Free society - our collective goal<br>போதைப்பொருள் இல்லாத சமூகம் - நமது இலக்கு |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# JULY 2025

## ACTIVITY - ESSAY WRITING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | World Population Day | Challenges of increasing population in India<br>இந்தியாவில் மக்கள் தொகை அதிகாரிப்பினால் எற்படும் சவால்கள் |
| முல்லை | Educational Development Day | Education Development day<br>கல்வி வளர்ச்சி நாள் |
| மருதம் | World Youth Skills Day | Youth Empowerment Through Skill Development<br>திறன் மேம்பாடு மூலம் இளைஞர்களின் வளர்ச்சி |
| நெய்தல் | World Chess Day | Chess : A mind game<br>கூர்சிந்தனையைத் தூண்டும் சதுரங்க விளையாட்டு |
| பாலை | International Day of friendship | Importance of friendship<br>நட்பின் மகத்துவம் |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES AUGUST 2025

## ACTIVITY - POEM RECITATION

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | International Youth Day | Youth are the Future of the Nation<br>இளைஞர்களே நாட்டின் எதிர்காலம் |
| முல்லை | Independence Day | My country, my pride<br>என் நாடு, என் பெருமை |
| மருதம் | World Humanitarian Day | Let's help, Let's rise !<br>உதவுவோம்! உயர்த்துவோம்! |
| நெய்தல் | World Photography Day | My favourite photo<br>என்னைக் கவர்ந்த புகைப்படம் |
| பாலை | National Sports Day | Let's Play, Let's grow !<br>விளையாடுவோம்! பலம்பெருவோம்! |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# SEPTEMBER 2025

## ACTIVITY - STORY TELLING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | Teacher's Day | "Imagine you wake up one morning and find yourself as your class teacher for an entire day. Tell a story on what would you do ?<br><br>"நீங்கள் ஒரு நாள் முழுவதும் உங்கள் வகுப்பின் ஆசிரியராகிவிட்டீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள் . நீங்கள் என்ன செய்வீர்கள் கதையை தொடர்க... |
| முல்லை | International Literacy Day | "Imagine you are given an opportunity to publish a story in your class textbook. Tell this as an interesting story.<br><br>பாடநூலில் நீங்கள் விரும்பும் கதை இடம்பெற வாய்ப்பு கொடுக்கப்பட்டால் எந்தக் கதையை தேர்வு செய்விர்கள்,அந்தக் கதையை சுவைபட கூறுங்கள் |
| மருதம் | World First Aid Day | "Imagine you and your friends are on a trip. One of your friend gets hurt. Tell a story about, how would you use your first aid knowledge to help your friend and what would happen next?"<br><br>" நீங்களும் உங்கள் நண்பர்களும் சுற்றுலாப் பயணத்தில் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். யாராவது காயமடையும் போது உங்கள் அறிவைப் பயன்படுத்தி எவ்வாறு முதலுதவி செய்வீர்கள், என்றும் அடுத்து என்ன நடக்கும் என்றும் கூறுங்கள் "... |
| நெய்தல் | World Tourism Day | "Imagine you are a tour guide for tourists who have come to explore Tamilnadu. Tell a story about where you would take them and what you would show?"<br><br>தமிழ்நாட்டை சுற்றிப் பார்க்க வந்த பார்வையாளர்களுக்குச் சுற்றுலா உங்களை வழிகாட்டியாக கற்பனை செய்து பாருங்கள். அவர்களை எங்கு அழைத்துச் செல்வீர்கள், என்ன காண்பிப்பீர்கள்?" |
| பாலை | International Day of Awareness of Food Loss and Waste | Tell a story on how we could use excess food or leftovers, in other ways rather than wasting it.<br><br>நம் தேவைக்கு அதிகமாக கிடைக்கும் உணவு , குப்பைத் தொட்டிக்கு செல்லாமல் வேறு எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதை சுவைப்பட விவரித்துக் கூறுக |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES OCTOBER 2025

## ACTIVITY - SPEECH

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | Gandhi Jayanti | "The Father of Our Nation - Mahatma Gandhi"<br>தேசத் தந்தை மகாத்மா காந்தி |
| முல்லை | World Mental Health Day | Happy and Safe school life<br>மனமகிழ்ச்சியான பள்ளி வாழ்க்கை |
| மருதம் | International Day of the Girl Child | Respect Girls ! Educate Girls !<br>பெண்களை மதிப்போம் ! பெண் கல்வியை உயர்த்துவோம் ! |
| நெய்தல் | World Food Day | Junk food and it's harmful effects<br>துரித உணவு ஆரோக்கியத்தின் எதிரி |
| பாலை | International Day of the Eradication of poverty | Role of education in eliminating poverty<br>கல்வியால் வறுமையை வெல்வோம்! |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# NOVEMBER 2025

## ACTIVITY - LETTER WRITING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | National Education Day | Write a letter to the Education Minister thanking them for any growth in your school or education system, sharing how it has helped the students and the school.<br>உங்கள் பள்ளிக் கல்வி முறைமையில் ஏற்படுத்திய ஒரு நல்ல செயல்பாட்டிற்கு காரணத்தோட நன்றி தெரிவித்து கல்வி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதுக. |
| முல்லை | Children's Day | Write a letter to the HM suggesting fun activities for Children's Day celebration<br>குழந்தைகள் தின கொண்டாட்டத்தில் உங்களுக்குப் பிடித்த வேடிக்கையான செயல்பாடுகளைப் பரிந்துரைத்து தலைமை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக. |
| மருதம் | World Diabetes Day | Write a letter to the school HM requesting to provide healthier food options in school canteen over sugary snacks or junk food.<br><br>பள்ளி உணவகத்தில் சர்க்கரை நிறைந்த் சிற்றுண்டிகள்/ உடம்பிற்கு தேவையில்லாச் சத்தற்ற உணவுகளுக்கு பதிலாக ஆரோக்கியமான நல்ல உணவு வழங்கக் கோரி பள்ளித் தலைமை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக. |
| நெய்தல் | World Toilet Day | Write a letter to the local councilor requesting the construction of a public toilet with water facilities in your area.<br><br>உங்கள் பகுதியில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒன்றை அமைக்க நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுங்கள் |
| பாலை | Constitution Day | Write a letter to the Education minister of Tamilnadu, sharing how your school and the students have practiced the constitutional values in your school.<br><br>நடப்பு ஆண்டில் உங்கள் பள்ளியும் மாணவர்களும் அரசியலமைப்பு விதிகளின் மதிப்புகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தியுள்ளனர் என்பதைக் குறிப்பிட்டு, தமிழக கல்வி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# DECEMBER 2025

## ACTIVITY - NEWS REPORT WRITING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | World AIDS Day | imagine AIDS awareness program was held in yours school..Write a news report sharing highlights from the programme. உங்கள் பள்ளியில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களை பற்றி நாளிதலுக்கான செய்தி அறிக்கை ஒன்றை எழுதுங்கள். |
| முல்லை | National Pollution control Day | Write a news report requesting the Municipal Corporation to take action on plastic pollution observed in your area.<br><br>உங்கள் பகுதியில் குவிந்த கிடக்கும் நெகிழிக் குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றும் விழிப்புணர்வு அறிக்கையை நகராட்சி அலுவலகத்திற்கு வலியுறுத்தி எழுதுங்கள் . |
| மருதம் | International Day of persons with disabilities | Write a news report requesting the infrastructural developments required to meet the needs of students with disabilities in your school.<br><br>உங்கள் பள்ளியில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களின் தேவைகளைப் நிறைவேற்ற வேண்டிய உள்கட்டமைப்பு மேம்பாடுகளை வலியுறுத்தி ஒரு அறிக்கையை எழுதுங்கள். |
| நெய்தல் | World Soil Day | Imagine you are participating in school gardening project. Write a news report on the project sharing your learnings about the soil and plant growth<br><br>நீங்கள் பள்ளி தோட்டக்கலை திட்டத்தில் பங்கேற்று மண் மற்றும் தாவர வளர்ச்சி பற்றி நீங்கள் கற்றுக்கொண்டவற்றைப் பகிர்ந்து கொண்டு பயனுள்ள திட்டம் குறித்து ஒரு அறிக்கையை எழுதுங்க |
| பாலை | National Mathematics Day | Imagine your math project has won prize at state level math exhibition. Write a news report introducing yourself and your project.<br><br>உங்கள் கணித திட்டம் மாநில அளவிலான கணித கண்காட்சியில் பரிசு வென்றதாக கற்பனை செய்து பாருங்கள். உங்களையும் உங்கள் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி ஒரு செய்தி அறிக்கையை எழுதுங்கள். |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES JANUARY 2026

## ACTIVITY - SPEECH

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | National Road safety Week | Road safety<br>சாலை பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு |
| முல்லை | International Day of education | My vision for School education<br>நான் விரும்பும் கல்விச் சூழல் |
| மருதம் | Thiruvalluvar Day | The Universal virtue of Thirukkural<br>"உலக அறம் போற்றும் திருக்குறள்" |
| நெய்தல் | International Day of clean energy | "Clean Energy for a Green Planet"<br>" பசுமை வளர்த்து பார் காப்போம்" |
| பாலை | Republic Day | Our Rights, Our Responsibility.<br>நாட்டின் உரிமைகள் அறிவோம்! பெருமிதமாய் பின்பற்றுவோம்! |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# FEBRUARY 2026

## ACTIVITY - DEBATE

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | World Cancer Day | Is cancer a lifestyle disease ?<br>வாழ்வியல் பழக்கங்களே புற்றுநோய்க்கான காரணம் |
| முல்லை | Safer internet day | Pros and cons of social media platforms<br>சமூக ஊடகங்களின் நன்மை தீமைகள் |
| மருதம் | International Day of women and girls in science | Women in science careers vs Women in other careers : Where do women achieve ?<br>அறிவியல் துறையில் பெண்கள் vs பிற துறையில் பெண்கள் - சாதனைகள் எவற்றில் |
| நெய்தல் | World day of social justice | Is everything possible for everyone?<br>எல்லோருக்கும் எல்லாம் சாத்தியமா |
| பாலை | National Science Day | Growth and decline in the field of STEM<br>அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் ! வீழ்ச்சியும்! |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# LITERARY CLUB ACTIVITIES
# MARCH 2026

## ACTIVITY - SLOGAN WRITING

| HOUSE | THEME | TOPIC |
|---|---|---|
| குறிஞ்சி | Zero Discrimination Day | End discrimination<br>பாகுபாட்டைத் தவிர்ப்போம் |
| முல்லை | World wildlife day | Wildlife conservation<br>வனவிலங்களின் வீடு ... காடே |
| மருதம் | International Women's Day | Celebrating Women Around Us<br>நம்மைச் சுற்றியுள்ள பெண்களைக் கொண்டாடுவோம் |
| நெய்தல் | World Water Day | Water conservation<br>நீர் பாதுகாப்பு |
| பாலை | International Day of zero waste | Zero Waste - A path to clean planet<br>கழிவுகளை தவிர்ப்போம் தூய்மையை காப்போம் |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# QUIZ CLUB ACTIVITY

## வினாடி வினா நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள்

- **சுற்று I (மாதாந்திர தலைப்புகள் )** - இணைப்பில் அந்தந்த பட்டியலிடப்பட்டுள்ளபடி, மாதத்திற்கான கருப்பொருளின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவிற்கும் கேள்விகளைக் கேட்பார்.

- **சுற்று II (கல்வியாளர்கள்)** - ஆசிரியர் ஒவ்வொரு குழுவியையும் பாடம் தொடர்பான கேள்விகளை கேட்பார் அதாவது கணிதம், அறிவியல் சமூகஅறிவியல் , ஆங்கிலம் (இலக்கிணம்), தமிழ் (திருக்குறள்)

- **சுற்று III (தேன் சிட்டு மற்றும் செய்தித்தாள்)** - ஆசிரியர் ஒவ்வொரு குழுவையும் பின்னர் 2 கேள்விகளை கேட்பார் பின்னர் தேன் சிட்டு இதழ், செய்தி தாள், நடப்பு விவகாரங்கள் மற்றும் பொதுஅறிவு சார்ந்து.

- ஆசிரியர்கள் ஒவ்வொரு சுற்றுக்கும் 10 கேள்விகளைத் தயாரிக்க வேண்டும், இது மொத்தம் 30 கேள்விகள் .ஒவ்வொரு கேள்வியும் 5 மதிப்பெண்கள்.

- வினாடி வினா செயல்பாட்டை நடத்தும்போது ஒவ்வொரு குழுவின் பதிவு செய்ய ஆசிரியர்கள் அட்டவணையும் கொடுக்கப்பட்ட மதிப்பீடுகளையும் பயன்படுத்துவர்.

| சுற்றுகள் | குறிஞ்சி | | முல்லை | | மருதம் | | நெய்தல் | | பாலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் |
| சுற்று I | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 |
| சுற்று II | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 |
| சுற்று III | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 | 2 | __ / 10 |
| மொத்தம் | 6 | __ / 30 | 6 | __ / 30 | 6 | __ / 30 | 6 | __ / 30 | 6 | __ / 30 |

Scanned with OKEN Scanner

DEPARTMENT OF SCHOOL EDUCATION

# QUIZ CLUB ACTIVITY

## MONTHLY THEMES FOR ROUND-I QUIZ ACTIVITY

| MONTH | THEME |
|---|---|
| JUNE | World rainforest day, World Olympic Day, World Drug Day, International yoga day, World music day |
| JULY | World Population Day,, World Youth Skills Day, Birth anniversary of K.Kamaraj, World Chess Day, International Day of friendship |
| AUGUST | International Youth Day, Independence day, World Humanitarian Day, National Sports Day, World photography day |
| SEPTEMBER | Teacher's Day, World first aid day, International Day of Awareness of Food Loss and Waste, World Tourism Day, International Literacy Day |
| OCTOBER | Gandhi Jayanthi, World mental health day , International Day for the Eradication of Poverty, World Food Day, International Day of the Girl Child |
| NOVEMBER | National Education Day, Children's day, World Toilet Day, World Diabetes Day , Constitution Day |
| DECEMBER | World AIDS Day , National Pollution control day, International Day of Persons with Disabilities, World Soil Day, National mathematics day |
| JANUARY | National girl child Day, Thiruvalluvar Day, International Day of Clean Energy , Republic Day, National Road safety week |
| FEBRUARY | World Cancer day , International Day of Women and Girls in Science, Safer internet Day, World Day of Social Justice, National Science day |
| MARCH | Zero discrimination day , World Wildlife Day , International Women's Day, World Water Day, International Day of Zero Waste |

Scanned with OKEN Scanner